செய்தி வெளியீடு எண்–607 நாள்– 26.7.2008

# செய்தி வெளியீடு

## பத்தாம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதிதிராவிட பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்த 310 மாணவ மாணவியர் விரும்பும் மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்ந்து பயில ஒரு கோடியே 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதி!

## முதலமைச்சர் கலைஞர் ஆணை

ஆதிதிராவிட., பழங்குடியின வகுப்புகளைச் சார்ந்த மாணவ, மாணவியர் அகில இந்தியப் பொதுத் தேர்வில் கலந்து கொள்வதற்கு ஊக்கமளிக்கும் வகையில், அவர்களைத் தயார்ப்படுத்துவதற்காக அரசுப் பள்ளிகள், அரசு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகள், மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகள் ஆகியவற்றில் பத்தாம் வகுப்புப் படித்து அரசுப் பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் இவ்வகுப்புகளைச் சேர்ந்த மாணவ, மாணவியரில் ஒவ்வொரு மாவட்டத்திலும் 10 மாணவ மாணவியரைத் தேர்வு செய்து, அவர்கள் அந்தந்த மாவட்டங்களிலோ, பிற மாவட்டங்களிலோ சிறந்து விளங்கும் தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் 11ஆம் வகுப்பில் சேர்ந்து படிப்பதற்காக ஒவ்வொருவருக்கும் ஆண்டுக்கு 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் நிதியுதவி வழங்கும் திட்டம் கடந்த ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது.

அத்திட்டத்தின்படி, இவ்வாண்டில் தமிழகத்தில் உள்ள 31 மாவட்டங்களில் மாவட்டத்திற்கு 10 மாணவ, மாணவியர் என மொத்தம் 310 மாணவ, மாணவியரைத் தேர்வுசெய்து, அவர்கள் தாம் விரும்பும் சிறந்த தனியார் மேல்நிலைப் பள்ளிகளில் சேர்ந்து படிப்பதற்காக ஆண்டு ஒன்றுக்குத் தலா 28 ஆயிரம் ரூபாய் வீதம் இரண்டு ஆண்டுகளுக்கு 56 ஆயிரம் ரூபாய் என மொத்தம் ஒரு கோடியே 73 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் அனுமதித்து முதலமைச்சர் கலைஞர் ஆணையிட்டுள்ளார்.

***

வெளியீடு– இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.